**அரக்கோணம் நகராட்சி**

**மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண். 22 நாள் 23.03.2018.

பொருள் : மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 28.03.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 28.03.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

நகராட்சிப் பகுதியில் அரசு நிதி உதவி பெறுப் பள்ளிகள் மற்றும் தனியார் சுய நிதி கல்வி நிறுவணங்கள் போன்ற கட்டிடங்களுக்கும் சொத்துவரி விதிக்க அக்கல்வி நிறுவனங்கள் சம்மந்தபட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர்த்து அனைத்து கல்வி நிறுவணங்கள் எடுக்கும் சட்டம் பிரிவு 83(1) (C) -ன்படி திருத்தம் என செய்து 25.01.2018 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழிலில் வெளியீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-மன்றம் பதிவு செய்யலாம்**

**பொருள் எண்.03**

இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு (Revised Budget Estimate) மற்றும் 2018–2019ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு (Budget Estimate) தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.462/2018/பி3)**

**பொருள் எண் :04**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.29591/P3/2016 நாள்22.11.2016 கடிதத்தின்படி தூய்மை இந்தியா திட்டம் 2016–2017ன் கீழ் அரக்கோணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ரூ.420.00 இலட்சத்திற்கு கீழ்கண்டுள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதை நகர மன்றத் தீர்மான எண்.40 நாள்.20.01.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்சமயம் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.11088–5/2017/P3 நாள்24.05.2017ல் மதிப்பீடு ரூ.330.00 இலட்சத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட பணிகளுக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை நகர மன்றத் தீர்மான எண். 132 நாள். 31.05.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| Sl No | Description | Estimate Amont (Rs in Lakhs) | Package Amount (Rs in Lakhs) |
|---|---|---|---|
| 1. | Purchase of Primary and Transportation Vehicles Light Commercial Vehicle 2cu.m capacity (4 Wheeler Tipper Auto)-4 Nos | 30.00 | 30.00 |
| 2. | Purchasing of Containerized Push carts - 41 Nos | 8.20 | 8.20 |
| 3. | Contruction of Municipal Solid Waste Processing facilities including ( i ) Pre Processing Shed for Machineries-900sq.m | 54.00 | 165.75 |
| | (ii) Construction of Compost Pad | 67.50 | |
| | (iii) Construction of 1/3rd roof for over the compost Pad | 40.25 | |
| | (iv) Providing Leachete Management System | 4.00 | |
| 4. | (i) Construction of Administrative office | 5.00 | |

| | | | |
|---|---|---|---|
| | (ii) Construction of Labour Rest Room | 8.00 | 118.15 |
| | (iii) Construction of Watchman shed | 1.50 | |
| | (iv) Construction of Cycle Shed | 2.00 | |
| | (v) Construction of Vehicle shed | 6.00 | |
| | (vi) Providing Water Supply arrangements | 6.50 | |
| | (vii) Providing Electrical Arrangements | 4.00 | |
| | (viii) Construction of Manure godown | 2.50 | |
| | (ix) Construction of Compound wall | 72.00 | |
| | (x) Construction of Internal Road (Paver block) | 6.75 | |
| | (xi) Providing of Green Belt | 3.90 | |
| 5. | Information Education and communication component | 7.90 | 7.90 |
| | Total | 330.00 | 330.00 |

இதில் தொழிநுட்ப அனுமதி வழங்கப்பட்ட வரிசை எண் 1க்கு 29.06.2017 மற்றும் வரிசை எண்.2க்கான பணிக்கு 30.06..2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு வரிசை எண்.1க்கான பணிக்கு 24.08.2017 மற்றும் வரிசை எண்.2க்கான பணிக்கு 31.07.2017 பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வரிசை எண்4 ஒருகிணைந்த குப்பைக் கிடங்கில அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் (அலுவலக அறை, தொழிலாளர்களுக்கான கழிவறை, காவலர் அறை, உரம் சேமிப்பு கிடங்கு அறை, சுற்றுச்சுவர், உட்புறசாலை, மின்வசதி, குடிநீர் வசதி மற்றும் பசுமை சூழல் ஏற்படுத்துதல்) பணிக்கு ரூ.118.15 லட்சம் மதிப்பீட்டில் 29.06.2017 ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நகர மன்ற தீர்மான எண்.166 நாள்.31.07.2017ல் பணி உத்திரவு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில், மேற்படி பணிக்கு 11.10.17ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளது.

மேலும், இந்நகரில் தினசரி சேகரமாகும் குப்பைகள் தரம் பிரிக்க நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ஆய்வுக் கூட்டம் மற்றும் கடிதத்தின்படி நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்கள், பூங்காக்கள் மற்றும் சுடுகாடு முதலிய இடங்களை தெரிவு செய்து Micro Composting முறையில் அறிவியல் ரீதியாக அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏற்கனவே வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியின்படி உள்ள ரூ.330.00 இலட்சத்தில் தள்ளுவண்டி, டிப்பர் லாரி, உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் I E C செயல்பாடுகள் போக மீதமுள்ள தொகை ரூ.165.75 இலட்சத்திற்கான மேற்குறிப்பிட்ட நிர்வாக அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண்.3க்கான பணிகளுக்கு மாற்றாக நுன் உரமாக்கல் ( Micro Composting Center) கட்டமைப்பு ஏற்படுத்த விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப அறிவுறுத்தியதின் அடிப்படையில், Micro Composting கட்டமைப்பு ஏற்படுத்த நகராட்சிக்கு சொந்தமான கீழ்வரும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, மதிப்பீடு ரூ.165.75 இலட்சத்தில் விரிவான திட்ட அறிக்கையை நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர், அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந,க,எண்.11088–10/பி3/2017 நாள்.24.05.2017ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு செயல்படுத்தாத பணிகள் விவரம் | மதிப்பீடு தொகை | Micro Composting கட்டமைப்பு ஏற்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி கோரும் பணிகள் | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| 1. | **Contruction of Municipal Solid Waste Processing facilities including**<br>( i ) Pre Processing Shed for Machineries-900sq.m | **54.00** | 1. வார்டு எண். 03 ராஜுவ் காந்தி நகர் – பழைய உரக்கிடங்கு<br>(3, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16) | 52.00 |
| | (ii) Construction of Compost Pad | **67.50** | 2. வார்டு எண். 22 ரத்தன் சந்த் நகர்– பூங்கா<br>((1, 2, 4, 5, 17, 18, 19, 20, 21, 22, 23) | 52..00 |
| | (iii) Construction of 1/3rd roof for over the compost Pad | **40.25** | 3. வார்டு எண். 33 சோமசுந்தரம் நகர்– பூங்கா (24, 25, 26,27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36) | 61..75 |
| | (iv) Providing Leachete Management System | **4.00** | | |
| | மொத்தம் | 165.75 | மொத்தம் | 165.75 |

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1307/2016/இ1**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் கடந்த 2015–ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. சோமசுந்தரம் நகர் பகுதியில் துணை உந்து நிலையத்தை அமைத்து அதில் கழிவு நீர்க் குழாய் இணைப்புகளை இணைக்கும் பணி நடைபெறும் நிலையில் மேற்படி கழிவு நீர்க் குழாய்களை இணைக்க அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் 72.00 ச.மீட்டர் தேவைப்படுகிறது. எனவே, அரக்கோணம் நகரம், வார்டு–டில், பிளாக்–28, நகர புல எண்.13/1–ல் பாதாள சாக்கடை திட்டத்திற்காக 72.00 ச.மீட்டர் பரப்பளவு உள்ள அனாதீனம் புறம்போக்கு நிலத்தை அரக்கோணம் நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்து தருமாறு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் ஏக மனதாக ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண்.2535/2006/இ1)**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 36 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதாலும் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நிலையில் உள்ளதாலும் தற்போது வீடுகளுக்கு கழிவு நீர் இணைப்பு வழங்குவது காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் நகராட்சியின் நிதி நிலைமை கருத்தில் கொண்டும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–05 அவர்களின் ஆய்வுக்கூட்ட நாள் 23.10.2017 அறிவுரையின் படி இந்நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை இணைப்பு நகராட்சியின் மூலம் வழங்கிட உரிய அறிவுரை வழங்கப்பட்டது.

பாதாள சாக்கடை திட்ட வீட்டு இணைப்புகள் வழங்க மதிப்பீட்டு தொகை ரூ.1345.00 இலட்சத்திற்கு மூன்று சிப்பங்களாக பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் DPR-ல் கொடுக்கப்பட்டுள்ள 14400 மற்றும் கூடுதலாக 5600 என மொத்தம் 20000 வீட்டு இணைப்புகளுக்கு பணிகள் செய்ய நகராட்சியின் மூலம் முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மேம்பாட்டு நிறுவனம் Tamilnadu Urban Finance and Infrastructure development Corporation Ltd (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடன் பெற்று கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள ரூ.1345.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | **சிப்பம் – I** மண்டலம் -I மற்றும் III பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 510.00 |
| 2. | **சிப்பம் – II** மண்டலம் -IA மற்றும் II பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 460.00 |
| 3. | **சிப்பம் – III** வார்டு எண்.01 முதல் 36 வரையில் உள்ள விடுப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் | 375.00 |
| **மொத்தம்** | | **1345.00** |

**அலுவலக குறிப்பு : – வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்குவது காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு நகராட்சியின் நிதி நிலைமை மற்றும் நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி நிதி நிறுவனத்தில் வட்டியில்லா கடன் பெற்று பணிகள் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.2535/2006/இ1**

**பொருள் எண் :07**

2018–2019 ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டுள்ள இனங்களுக்கு முன்றாவது முறையாக 20.03.2018 அன்று கோரப்பட்டது விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட கேள்வி விவரம் | ஒப்பந்தப்புள்ளியின் பெறப்பட்ட விவரம் |
|---|---|---|---|
| 1. | பேரூந்து நிலையத்தில் வரும் பேரூந்துகளுக்கு தினசரி சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | யாரும் கலந்து கொள்ளவில்லை | 1. திரு. பொன் நடராஜன் ரூ. 4,50,000/-<br>2. திரு. துரைராஜன் ரூ. 390,000/- |
| 2. | நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பத்தில் | யாரும் கலந்து கொள்ளவில்லை | யாரும் கலந்து கொள்ளவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | | |
| 3. | ஆடு, மாடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1. திரு. சந்திரன் ரூ. 46,600/-<br>2. திரு. முனுசாமி ரூ. 46500/– | யாரும் கலந்து கொள்ளவில்லை |

வ.எண் 1–ல் கண்டுள்ள இனத்திற்கு முன்றாவது முறையும் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை ஒப்பந்தப்புள்ளியில் திரு. பொன் நடராஜன் என்பவர் உச்ச கேள்வியாக ரூ.4.50,000/- கேட்டுள்ளார் இத்தொகையானது கடந்த முன்று ஆண்டு சராசரியாக வரப்பெற்ற துறை வசூல் தொகையான ரூ.4,30,078/-ஐ விட ரூ.19,922/- அதிகமாகவும் சென்ற ஆண்டு துறை வசூல் தொகை ரூ. 432000/-ஐ விட ரூ.18,000/- அதிகமாக உள்ளது. மேலும் கடந்த ஆண்டுகளில் வரப்பெற்ற துறை வசூல் நிகர வருவாய் கணக்கீட்டில் கீழ்க்கண்டவாறு.

ஓர் ஆண்டு துறை வசூல் – ரூ. 432,000/- (2017-2018)

ஓர் பணியாளர் செலவினம் ஓர் ஆண்டுக்கு 12X20,000 } ரூ. 2,40,000/–

டிக்கெட் புத்தகம் அச்சடிக்க கட்டணம் } ரூ. 36,370/-

} ரூ. 2,76,370/-

துறை வசூல் தொகை ரூ. 4,32,00/–
செலவினம் ரூ. 276370/-
நிகர வருமானம் ரூ. 1,55.630/-

இந்நிலையில் மேற்படி கணக்கீட்டின்படி நிகர வருவாய் ஆண்டிற்கு ரூ.155630/- தான் வரப்பெறுகிறது, ஆனால் தற்போது வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் நிகர வருவாய் ரூ.4,50,000/- ஆகும் இதனை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

வ,எண். 2 குறுகிய கால பொது ஏலப் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பவைப்படுகிறது.

வ,எண். 3–ல் கண்டுள்ளஆடு/மாடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் திரு. சந்திரன் என்பவரால் உச்ச ஏல கேள்வி ரூ.46,600/–க்கு ஆனது கடந்த முன்றாண்டு சராசரி தொகையான ரூ. 40457/-க்கு ரூ.6143/– அதிகமகாவும் சென்ற ஆண்டு தொகையான ரூ.42446/-ஐ விட ரூ.4154/– அதிகமாகவும் உள்ளது. எனவே உச்ச ஏலக் கேள்வி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு:-</u>

(அ) வ,எண்.1. பேருந்து நிலைத்தில் வரும் பேருந்துகளுக்கு தினசரி சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் திரு. பொன் நடராஜன் கோரியுள்ள தொகை ரூ.4,50,000/- ஓர் ஆண்டுக்கு (2017–2018) துறை வசூல் ஒப்பிட்டு பார்க்கப்பட்டதில் அதிகமாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) வ.எண்.3. திரு. சந்திரன் என்பவர் ஆடு/மாடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் கேட்டுள்ள உச்ச ஏலக் கேள்வியான ரூ.46,600/- ஐ முன்றாண்டுக்கு சராசரி மற்றும் சென்ற ஆண்டு தொகையினை விட அதிமாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலம்.

(ஆ) வ.எண். 2 நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பிடம் தங்கள் வசூல் செய்யும் உரிமத்திற்கு குறுகிய கால பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலிவு விலை அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் அரிசி, தயிர், எரிவாயு உருளை, மகளிர் சுய உதவி குழு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் உள்பட ஒருமாதத்திற்கு தோராயமாக ரூ.3,00000/–வீதம் 12 மாதங்களுக்கு ஆகும். செலவினத் தொகை ரூ.36,00,000/–ஐ (முப்பத்தி ஆறு இலட்சங்கள்) 2018–19 நிதி ஆண்டிற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.860/அ2/2017)**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளிலும் தணிநபர் கழிப்பிடம் கட்டிட அனுமதிக்கப்பட்டு பணிகள் நிறைவடையாமல் உள்ளதாலும் , தனிநபர் கழிவறை கட்டிட அனுமதிக்கப்பட பயனாளிகளில் பலர் இதுவரை கழிவறை கட்டாமல் உள்ளதாலும், அப்பணிகளை நகராட்சி மூலமே கட்டி தந்திடவும், இப்பணியினை விரைந்து முடித்திட வேண்டி இந்நகராட்சி பணி ஆய்வர் S. பிரேம்சுந்தர் என்பர் இப்பணிக்கு தேவையான மூலபொருட்கள் (கதவுகள், கழிவறைபேசின், மற்றும் RCL உறைகள்) கொள்முதல் செய்திட அலுவலக முன்பணமாக ரு. 4,90,000/- ஐ வழங்குமாறு 0603.2018 ஆம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு இத்தொகையினை IHHL திட்ட CRS நிதியில் இருந்து முன்பணமாக வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: (அ) பணியின் அவசர அவசியத்தை கருதி இத்தொகையினை முன்பணமாக வழங்கிட அனுமதிக்காலம்.**

**(ஆ) அவசர அவசியம் கருதி IHHL திட்ட பணிகளை உடன் முடிக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன்பண தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 319/பி3/2018**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு–4ல் TNHB பகுதியில் உள்ள பைப்லைன் உபகரணங்கள் வைத்து பாதுகாக்கும் கிடங்கு (Godown) பழுதடைந்து மேல் கூரைகள் உடைந்தும், சுவர்களில் பெரிய அளவிலான விரிசல்கள் ஏற்பட்டு உள்ளதால் மேற்படி கட்டிடத்தை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் பைப்லைன் உபகரணங்களுக்கு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் புதியதாக (Godown) கிடங்கு அமைக்க மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் செய்யவும் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :11**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள Pannel Board மெயின் சுவிச்சு பழுதடைந்து உள்ளது, மேலும் திறந்த வெளி கிணற்றிற்கு ஆழ்துளை குழாய் கிணறுகளில் இருந்து குடி தண்ணீர் வரும் பைப்லைன் பழுதடைந்து அற்காங்கே கசிவுகள் ஏற்படுகிறது. இதனல் நீர் உந்து செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே இப்பணிகளை செய்யவும், ஆழ்துளை குழாய் கிணறு 17,18,19–ல் உள்ள நீர் மூழ்கி மோட்டாரை ஆழ்துளை குழாய் கிணற்றில் கூடுதலாக ,இறக்கி பொருத்தி தரவும் மதிப்பீடு ரூ.90000/–க்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி குடிநீர் நிதி 2017–2018ன் கீழ் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :12**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சோமசுந்தரம் நகர் (வார்டு–33) பகுதியில் உள்ள ISP கழிப்பிடத்தில் உள்ள 1 HP மின் மோட்டார் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, புதியதாக 1 HP மின் மோட்டார் வாங்கி பொருத்தி இயக்க வேண்டியுள்ளது, இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இப்பணியை செய்ய மதிப்பீடு ரூ. 25000/–க்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் செய்யவும் மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :13**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள Digital flow meter பழுதடைந்து உள்ளது. இதனால், நீர் உந்தப்படும் அளவு துல்லியமாக கணக்கிட இயலாத நிலையில் உள்ளது. எனவே, Digital flow meter–ஐ பழுதுபார்த்து தர மதிப்பீடு ரூ.170000/–க்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி குடிநீர் நிதி 2017–18ன் கீழ் பணியை செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :14**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு–16 மற்றும் 17 ஐ இணைக்கும் பகுதியான கண்ணன் மாவு மில் தெரு கலைவானர் சந்து தெரு இணைப்பில் உள்ள பாலம் பழுதடைந்த பொதுமக்கள் பயன்படுத்த இயலாத ஆபத்தான நிலையில் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு மற்றும் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பபடுகிறது. எனவே, மேற்படி பழுதடைந்த பாலத்தை அப்புறப்படுத்தி புதியாக பாலத்தை கட்ட மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) பணியின் அவசியத்தை முன்னிட்டு நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :15**

அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் 40 KVA ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளது. நடைபெறும் மார்ச் மாத வசூல் மற்றும் குடிநீர் அவசியத்தத முன்னிட்டு ஜெனரேட்டரை உடனடியாக சரிசெய்து இயக்க வேண்டியுள்ளது, ஜெனரேட்டரில் இன்ஜுன் ஆயில் மிகவும் குறைவாக உள்ளது. மேலும் ஆயில் பில்டர் மாற்ற வேண்டியுள்ளது, இப்பணிகளை Kirloskar நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.4700/– பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி குடிநீர் நிதி 2017–18ன் கீழ் பணியை செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :16**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 நேரூஜி நகர் பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணி மேற்கொள்ள நகர மன்ற தீர்மான எண்.1740 நாள்.26.08.2016ன்படி மெசர்ஸ். M H T இன்ஜினியரிங் நிறுவனத்திற்கு கடந்த 29.08.2016ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் மற்றும் மதிப்பீட்டு தொகை 31.01.2018ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. இப்பணியை ஏற்கனவே செய்யப்பட்டு வரும் விலை விகிதத்திலே செய்யவும் ஓராண்டு காலம் (01.02.2018 முதல் 31.01.2019 வரை ) நீட்டித்து தரவும் வேண்டி கடிதம் அளித்துள்ளார். ஏனவே, இப்பணியை 01.02.2018 முதல் 31.01.2019 வரை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்**

**2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் பின்னேற்பு பெற்று பணியை தொடர்ந்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**3. நகர மன்ற தீர்மான எண். 1740 நாள்.26.08.2016ல் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் பணியை செய்யவும், அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்ககலாம்**

**ந.க.எண்.1567/2016/இ1**

**பொருள் எண் : 17**

2018–2019 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பித்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நான்காவது முறையாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 28.03.2018 அன்று கோரப்பட்டது. மேற்படி இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் வருமாறு.

| வ. எண் | குத்தகை இனம் | பெயர் மற்றும் முகவரி | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1. | நாளாங்காடி கட்டண கழிப்பித்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1.) திருமதி. பார்வதி ஏ.பி.எம் சர்ச் பழனிப்பேட்டை அரக்கோணம்<br><br>2) திரு. G. ரவி த/பெ.கோபன்னா அருணச்சலம்தெரு, அரக்கோணம். | ரூ. 88,000/–<br><br>ரூ. 87,900/– |

வ.எண் 1–ல் கண்டுள்ள திருமதி. பார்வதி என்பவர் கேட்டுள்ள உச்ச ஏலக் கேள்வி ரூ. 88,000/– இத்தொகையானது கடந்த முன்று ஆண்டு சராசரி தொகையான ரூ. 83016/-ஐ விட ரூ. 4984/- அதிகமாகவும் சென்ற ஆண்டு (2017–2018) தொகையான ரூ.87098/- ஐ விட ரூ.902/-ஐ விட அதிகமாகவும் உள்ளது. இதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-_**வ.எண் 1–ல் கண்டுள்ள திருமதி. பார்வதி என்பவர் கேட்டுள்ள உச்ச கேள்வித் தொகை ரூ. 88,000/–மானது கடந்த முன்றாண்டு சராசரி தொகையினை விட அதிகமாவும் மற்றும் சென்ற ஆண்டு (2017–2018) தொகையினை விட அதிகமாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண். 18/சி2/2018**

**பொருள் எண் :18**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் தினசரி வழங்க வேண்டி கீழ்காணும் பகுதிகளை செய்ய வேண்டியுள்ளது. மேலும் ஆழ்துளை குழாய் கிணறுகளை பழுது பார்க்க வேண்டியுள்ளது. எனவே, கீழ்காண்டவாறு பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கற்பக பிள்ளையார் கோயில் தெரு முதல் காந்தி ரோடு வழியாக TNHB அன்னை இந்திராகாந்தி சிலை வரை குடிநீர் பகிரமான குழாய் (Feedel Main) அமைத்தல் | ரூ.10.00/– |
| 2. | வார்டு–3 கல்யாண மண்டப்ம் தெரு முதல் அவில்தாடா முனுசாமி தெரு மற்றும் ரத்தினம் (வார்டு–1) நகர் விரிவாக்க பகுதியிலும் குடிநீர் விநியோக குழாய் அமைத்தல் | ரூ.7.00/– |
| 3. | அரக்கோணம் நகராட்சிக்க சொந்தமான ஆழ்துளை குழாய் கிணறு கைபம்பு மற்றும் சிறுமின் விசைபம்புகள் பகுது பார்த்தல் | ரூ.5.00/– |

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**பொருள் எண் :19**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள Stand by Automatic spot chlorination plant-கள் பழுதடைந்து உள்ளது. நேராய்வு செய்ததில் இந்த இரண்டு plant-களும் பழுபார்த்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, இவ்விரண்டு plant களையும் புதியதாக அமைக்க வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீடு ரூ. 450000/–க்கு தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி குடிநீர் நிதி 2017–18–ல் இருந்து பணியை செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :20**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் (ONSITE Compost Centre) உர மையங்களை அமைக்க நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் அறிவுறுத்தலின் படி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் வேலூர், அவர்கள் ஆய்வு கூட்டத்தின் போது அறிவுரை வழங்கியுள்ளார். எனவே, அதன்படி உரமையங்கள் (ONSITE COMPOST) அமைக்க இரண்டு பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டது. எனவே, TNHB மற்றும் பழனிபேட்டை காந்தி பூங்கா பகுதிகளில் உர மையங்கள் (ONSITE COMPOST) அமைக்க மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :21**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்து டாக்டர். B.R. அம்பேத்கர் உருவச் சிலைகளை Painting செய்யவும், அதனை பாதுகாக்க அமைந்துள்ள Grill கம்பிகளுக்கு பெயிண்டிங் செய்து மராமத்து பணிகள் செய்யவும் மதிப்பீடு ரூ.85000/—க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :22**

அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட காந்தி ரோடில் உள்ள Dr.B.R.அம்பேத்கர் வளைவு அண்ணரின் பிறந்த நாளை முன்னிட்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது. எனவே, Dr.B.R. அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு வளைவை புதுப்பித்து தர மதிப்பீடு ரூ.100000/—க்கு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :23**

இந்நகராட்சியில் 23.03.18ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1.** | கல்வி நிதி<br>நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நகராட்சி பள்ளியில் உள்ள ICDS (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம்) மையத்திற்கு Partition பணி மற்றும் தற்காலிக shed அமைத்தல். | **1.30** | ஆர்.துரைராஜன் | 0.17% | ஏ.கே.பாரி | 0.52% |
| **2.** | நகராட்சிக்கு சொந்தமான ABM சர்ச் நகராட்சி பள்ளியில் Inter Lock Paver Block பணிகள் செய்தல். | **1.10** | ஆர்.துரைராஜன் | 0.07% | ஏ.கே.பாரி | 0.01% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | குடிநீர் நிதி<br>தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையங்களிலுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் 125HP Vertical Hallow Turbine மோட்டார்களை பராமரிப்பு பணிகள் செய்தல். | 8.50 | ஆர்.சண்முகம் | 0.15% | எஸ்.ரமேஸ்பாபு | 1.38% |
| 4. | கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் அலுவலக கட்டிடம் பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 | ஜி..ரவி | 0.02% | எஸ்.ரமேஸ்பாபு | 3.87% |
| 5. | பொது நிதி<br>2.50 Cum கொள்ளளவு கொண்ட Dumper placer Bin-கள் 12 எண்கள் விநியோகம் செய்தல். | 8.75 | சக்தி பாடி வோர்க்ஸ் | 0.00% | வாம்செக் பேப் | 3.85% |

**அலுவலக குறிப்பு: வரிசை எண்.1 முதல் 5 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2018**

**பொருள் எண் :24**

இந்நகராட்சியில் 23.03.18ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீ டு லட்சத் தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | நகராட்சி அலுவலக மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் அசோக்நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சோடியம் ஹைபோ குளோரைடு சொல்யூசன் விநியோக செய்தல். | 7.00 | சபரி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.66% | ராஜா கணபதி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.66% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | கல்லாறு நீரேற்றும் நிலையம் மற்றும் வின்டர்பேட்டை உயர்நிலை நீர் தேக்க தொட்டிகு சோடியம் ஹைபோ குளோரைடு சொல்யூசன் விநியோக செய்தல் | 9.00 | சபரி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.66% | ராஜா கணபதி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.66% |
| 3 | தக்கோலம் நீரேற்றும் நிலையம் மற்றும் ஜீப்ளி ரோடு உயர்நிலை நீர் தேக்க தொட்டிக்கு சோடியம் ஹைபோ குளோரைடு சொல்யூசன் விநியோக செய்தல் | 9.00 | சபரி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.66% | ராஜா கணபதி இன்ஜினியரிங் வோர்க்ஸ் | 0.662% |

**அலுவலக குறிப்பு: வரிசை எண்.1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2016**

**பொருள் எண் :25**

இந்நகராட்சியில் 23.03.18ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப் பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | நில அளவையர் மற்றும் ஜெனரேட்டர் அறை பழுதுபார்த்தல் | 4.50 | ஆர்.துரைராஜன் | 0.12% | ஏ.கே.பாரி | 0.13% |
| 2. | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2016–17ன் கீழ் அமைக்கப்படவுள்ள சாலைகளில் UGD Manholes-ஐ உயர்த்தி கட்டுதல் . | 2.50 | கே.பசுபதி | 0.004% | வி.சதிஷ்குமார் | 0.09% |
| 3. | வார்டு –8ல் காலிவாரி கண்டிகை 5வது தெருவில் சிறுபாலம் கட்டுதல். | 0.90 | எஸ்.ரமேஷ்பாபு | 0.05% | ஜி.ரவி | 1.31% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | புதிய பேரூந்து நிலையத்தின் மின் விளக்குகள் மற்றும் தெரு விளக்குகளின் பழுதுகளை சரிபார்த்து புதியதாக பொருத்தி தருதல் | 0.80 | ஆர்.துரைராஜன் | 0.06% | ஏ.கே.பாரி | 1.35% |
| 5. | நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களின் குழாய்கள், HDPE தொட்டி, CFL மின் விளக்கு, கதவுகள் மற்றும் மின் மோட்டார்கள் பழுதுகளை சரி செய்து இயக்கி தருதல். | 1.20 | V. சதிஷ்குமார் | 0.03% | A.K பாரி | 0.08% |
| 6. | வார்டு –8ல் காலிவாரி கண்டிகை மற்றும் குறிஞ்சி நகர் இணைப்பு சாலையில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுதல். | 2.70 | எஸ்.ரமேஷ்பாபு | 0.06% | ஜி.ரவி | 1.53% |

**அலுவலக குறிப்பு: வரிசை எண்.1 முதல் 7 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/201**

**பொருள் எண் :26**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்களை மார்ச் 2018ம் மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 257 நாள்29.12.2018–ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 19.03.2018 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் தொடர்ந்து DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே ஏப்ரல் 2018 முதல் ஜீன் 2018ம் மாதம் வரை தொடர்ந்து 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே பணி செய்து வரும் மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் தொடர்ந்து பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று 85 DBC பணியாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதற்கும்,மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 061/எச்1/2017)

**பொருள் எண் :27**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற வாகனங்கள் போதிய அளவில் இல்லாத காரணத்தால் வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. 1650/- வீதம் மார்ச் 2018 மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண்296 நாள்28.02.2018 ல் அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஏப்ரல் 2018ம் மாதம் முதல் ஜீன் 2018 ஆம் மாதம் வரை ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.55 லட்சத்திற்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தப்பட்டு வருவதற்கும், மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1.55 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்919/எச்1/2015)

**பொருள் எண் :28**

இந்நகராட்சியில் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்புக்காக பயன்படுத்தப்படும் டம்பர் பின்கள் 15 எண்ணிக்கை பழுதினை சரிசெய்ய உள்ளூரில் விலைப்புள்ளி கோரியதற்கு உத்தேச செலவின தொகை **ரூ.2.25** லட்சம் என பெறப்பட்டுள்ளது. எனவே தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவின தொகை **ரூ.2.25** லட்சத்திற்கும், நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கும் மற்றும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.2.25 லட்சத்திற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண்.769/எச்1/2018)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**அரக்கோணம் நகராட்சி**

**28.03.2018 அன்று நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் மன்ற தீர்மான எண். 32 6 ன்உண்மை நகல்**

இந்நகராட்சியில் 23.03.18ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | கல்வி நிதி<br>நகராட்சிக்கு சொந்தமான போலாட்சியம்மன் நகராட்சி பள்ளியில் உள்ள ICDS (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம்) மையத்திற்கு Partition பணி மற்றும் தற்காலிக shed அமைத்தல். | 1.30 | ஆர்.துரைராஜன் | 0.17% | ஏ.கே.பாரி | 0.52% |
| 2. | நகராட்சிக்கு சொந்தமான ABM சர்ச் நகராட்சி பள்ளியில் Inter Lock Paver Block பணிகள் செய்தல். | 1.10 | ஆர்.துரைராஜன் | 0.07% | ஏ.கே.பாரி | 0.01% |
| 3. | குடிநீர் நிதி<br>தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையங்களிலுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்கள் மற்றும் 125HP Vertical Hallow Turbine மோட்டார்களை பராமரிப்பு பணிகள் செய்தல். | 8.50 | ஆர்.சண்முகம் | 0.15% | எஸ்.ரமேஸ்பாபு | 1.38% |
| 4. | கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் அலுவலக கட்டிடம் பராமரிப்பு பணிகள் செய்தல். | 5.00 | ஜி..ரவி | 0.02% | எஸ்.ரமேஸ்பாபு | 3.87% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5. | பொது நிதி<br><br>2.50 Cum கொள்ளளவு கொண்ட Dumper placer Bin-கள் 12 எண்கள் விநியோகம் செய்தல். | 8.75 | சக்தி பாடி வோர்க்ஸ் | 0.00% | வாம்செக் பேப் | 3.85% |

**அலுவலக குறிப்பு: வரிசை எண்.1 முதல் 5 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/இ1/2018**
**மன்ற தீர்மான எண்.326** **நாள் 28.03.2018.**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**(ஓம்) திருமதி.கோ.கமலகுமாரி,பி.ஏ.,**

**ஆணையாளர் (ம)தனி அலுவலர்**

**அரக்கோணம் நகராட்சி**

**- உண்மை நகல் -**

**மேலாளர்**

**அரக்கோணம் நகராட்சி**